தினத்தந்தி



புதுச்சேரி 13-7-2015

கிருமாம்பாக்கம் ராஜீவ்காந்தி பொறியியல் கல்லூரியில்

# மும்பை ஐ.ஐ.டி.யின் 'இணையதள வழி கல்வி' மையம் தொடக்கம்




பாகூர், ஜூலை.13–

மும்பை ஐ.ஐ.டி. கல்வி நிறுவனத்தின் இணைய தள வழி கல்வி முறையின் (ஸ்போக்கன் டுடோரியல்) அங்கீகரிக்கப்பட்ட வள மையமாக, புதுவை மாநிலம் கிருமாம்பாக்கம் ராஜீவ்காந்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த மைய தொடக்க நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிர்வாகி பாஸ்கரன் தலைமை தாங்கினார். முதல்வர் (பொறுப்பு) மரிய ஜெயப்பிரகாஷ் வரவேற்றார். துணை முதல்வர் அய்யப்பன் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்களின் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்தும் வகையில், டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் 'இணையதள வழி கல்வி' முறை (ஸ்போக்கன் டுடோரியல்) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இதில், மும்பை ஐ.ஐ.டி. இணையதளம் மூலமாக மாணவ–மாணவிகளுக்கு கணிப்பொறி பயிற்சிகளும், இணையதள வழி கல்வி முறை குறித்தும் விளக்கமும் அளிக்கப்பட்டது. மேலும் இணைய தளம் மூலமாக பல்வேறு தேர்வுகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துணை பேராசிரியர் வினோத்குமார் செய்திருந்தார்.

Daily thanthi 13/07/2015
Page No: 15